தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் 06.08.2026

## முன்னிலை

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 5644/SCIC/2025**

திரு.த.வெங்கடாச்சலம், த/பெ.தங்கவேல் - மேல்முறையீட்டாளர்
எண்.13/162, அம்மன் ஸ்டோர்ஸ்
மகளிர் மேல்நிலைப்பள்ளி எதிரில்
தாரமங்கலம், ஓமலூர் வட்டம்
சேலம் மாவட்டம் - 636 307
Phone: 79042 85695.

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் / - பொது அதிகார அமைப்பு
சார்பதிவாளர்
தாரமங்கலம் சார்பதிவாளர் அலுவலகம்
சேலம் மாவட்டம் - 636 502.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **03.02.2025** |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 27.02.2025 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 10.03.2025 |
| 4. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 11.03.2025 |
| 5. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 05.04.2025 |
| 6. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 15.09.2025 |
| 7. | மனுதாரரின் ஆட்சேபனை மனு | 21.10.2025 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 03/02/2025 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ சார்பதிவாளர் அலுவலகம், தாரமங்கலம், சேலம் மாவட்டம் அவர்களுக்கு அனுப்பி, அதில் “தாரமங்கலம் சார்பதிவாளர் அலுவலகத்தால் 21/01/2025-ல் வழங்கப்பட்ட வில்லங்கச் சான்று எண்.EC/ONLINE/140454996/2025 என்பதில் குறிப்பிட்டுள்ள ஆவணம் எண்.1061/1982 தொடர்பான பதிவுகளுக்கு சான்றாக

சார்பதிவாளர் அலுவலகத்தில் பெறப்பட்ட ஆவணத்தின் நகல்களை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்" என்பன போன்று 11 (பதினொன்று) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (06/08/2026) ஆணையத்தின் காணொளி காட்சி வாயிலான விசாரணையின் போது மனுதாரர் திரு.j.வெங்கடாச்சலம் அவர்கள் சேலம் மாவட்ட ஆட்சியரகத்திலிருந்து ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி.த.ஜெயகீதா, சார்பதிவாளர், தாரமங்கலம் சார்பதிவகம் அவர்கள் ஆஜராகி, மனுதாரருக்கு, சமீபத்தில் 31/07/2026 தேதியிட்டு பதில்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்து, அதன் நகல்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மனுதாரர், மேற்குறிப்பிட்ட 31/07/2026 தேதியிட்ட பதில் கிடைக்கப் பெற்றதாகவும், ஆனால், அதில் இனங்கள் 1,2,3 மற்றும் 11 ஆகியவற்றிற்கு அளித்த பதிலில், தான் மனநிறைவு அடையவில்லை எனத் தெரிவித்தார்.

**3. எனவே, மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரின் அலுவலகத்திற்கு 18/08/2026 அன்று காலை 11.00 மணிக்கு செல்ல வேண்டுமென்றும், அதற்கேற்ற வகையில் பொதுத் தகவல் அலுவலர் / சார்பதிவாளர், தாரமங்கலம் சார்பதிவகம் அவர்கள் மனுதாரரின் சட்டப்பிரிவு 6(1)-க்கு தொடர்புடைய பதிவேடுகள் / ஆவணங்களில் குறிப்பாக இனங்கள் 1, 2, 3 மற்றும் 11-க்கானவற்றை தயார் நிலையில் வைத்திருந்து, அதனை மனுதாரர் பார்வையிடச் செய்து, மனுதாரர் கோரும் ஆவணங்களின் நகல்களை அளிப்பதோடு, அது குறித்த நிறைவேற்றுகை அறிக்கை (Compliance Report)யினை 18/08/2026-லிருந்து ஒரு வார காலத்திற்குள் ஆணையத்திற்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. மேற்கண்ட உத்தரவுகளுடன் இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 5644/SCIC/2025</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
சார்பதிவாளர்
தாரமங்கலம் சார்பதிவாளர் அலுவலகம்
சேலம் மாவட்டம் - 636 502.

**மேல்முறையீட்டாளர்**

திரு.த.வெங்கடாச்சலம், த/பெ.தங்கவேல்
எண்.13/162, அம்மன் ஸ்டோர்ஸ்
மகளிர் மேல்நிலைப்பள்ளி எதிரில்
தாரமங்கலம், ஒமலூர் வட்டம்
சேலம் மாவட்டம் - 636 307
Phone: 79042 85695.

RG/Sr.PC